Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

Official Property Record

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



இணை இயக்குநர்/உறுப்பினர் செயலர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருச்சிராப்பள்ளி மாவட்டம் அவர்களின் நடவடிக்கைகள் முன்னிலை : திரு.சு.ஸ்ரீபரத், எம்.இ.,

இணையதள விண்ணப்ப எண். SWP/BPA/007233/2023 நாள்:25.05.2023

பொருள்: கட்டிடம் – மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் – திருச்சிராப்பள்ளி மாவட்டம் –திருவெறும்பூர் வட்டம் – கீழக்குறிச்சி கிராமம் – சர்வே எண்: 208/1B3, 208/1C2 – மனை எண்: 429 NE – (L.P(R)/NTDA No.: 1/2020) – Morais City Extension-I – 1253.95 ச.மீ பரப்பளவு கொண்ட மணையிடத்தில் FSI Area – 3702.40 ச.மீ மற்றும் ஸ்டில்ட் + 5 தளங்கள் கொண்ட அடுக்குமாடி குடியிருப்பு (Affordable Housing Project) கட்டுமானத்திற்கு திட்ட அனுமதி அளித்து – உத்தரவிடப்படுகிறது – தொடர்பாக.

பார்வை :

1) மனுதாரர் Cecilia Edel Priya Managing Director, அவர்களின் இணையதள விண்ணப்பம் SWP/BPA/007233/2023, நாள்: 10.02.2023. Drawing Scrutiny Report: 7FPSRZG3.
2) மனுதாரரிடமிருந்து கட்டணம் செலுத்தி பெறப்பட்ட நாள் : 17.05.2023
3) அரசாணை எண்.138, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள் : 04.6.2004.
4) அரசாணை எண்.86 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள் 28.03.2012.
5) அரசாணை எண்.85, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள் 16.05.2017
6) அரசாணை எண்.1, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள் 05.01.2021.
7) அரசாணை எண்.18, மற்றும் 16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 4.2.2019 மற்றும் 31.01.2020.
8) அரசாணை எண்.54, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள் 12.03.2020.
9) அரசாணை எண்.53 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள் 16.4.2018.
10) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.ஏண்.7486/2009 பிஏ2 நாள் 16.04.2009.
11) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.21075/2009/ பிஏ1 நாள் 27.06.2012.
12) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.12201/2017/ பிஏ1 நாள் 22.09.2017.
13) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.14227/2017/ சிபி நாள் 14.12.2017.
14) நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் அதிகாரப்பகிர்வு சுற்றறிக்கை ROC No. 7963/2022/K1, நாள். 23.04.2022
15) அரசாணை எண்.19, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் [UD4(1)] துறை நாள் 02.03.2022.

உத்தரவு

பார்வை 14 –ல் கண்டுள்ள சுற்றறிக்கையில் வழங்கப்பட்டுள்ள அதிகார பகிர்வின் படி, வரைபடங்கள் TNCDBR– 2019–ன் படி விதிகளை நிறைவு செய்வதால், திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவெறும்பூர் வட்டம், கீழக்குறிச்சி கிராமம், சர்வே எண் 208/1B3, 208/1C2, மனை எண்: 429NE (L.P(R)/NTDA No.: 1/2020) – Morais City Extension-I 1253.95 ச.மீ பரப்பளவு கொண்ட மனையிடத்திற்கு "A **முதல்** D **வரை**" என எல்லையிட்டு மனையிட ஒப்புதலும், அம்மனையில் அமையவிருக்கும் கீழ்காணும் பரப்பு விவரங்களுடன் உத்தேசித்துள்ள ஸ்டில்ட் + 5 தளங்கள் கொண்ட அடுக்குமாடி குடியிருப்பு (Affordable Housing Project) கட்டுமான வரைபடத்திற்கு **"க.வ/ந.ஊ.இ.இ.(திமா) எண்.77/2023"** என எண்ணிடப்பட்டு தொழில்நுட்ப திட்ட அனுமதியும் அளிக்கப்படுகிறது

Sl.No.	Description	FSI Area in Sq.m	Non FSI Area in Sq.m	Total Area in Sq.m.
1	Stilt Floor (Parking)	-	806.22	806.22
2	First Floor	740.48	-	740.48
3	Second Floor	740.48	-	740.48
4	Third Floor	740.48	-	740.48
5	Fourth Floor	740.48	-	740.48
6	Fifth Floor	740.48	-	740.48
7	Head Room Area	-	38.20	38.20
Total		3702.40	844.42	4546.82
F.S.I Area : 3702.40 Sq.m F.S.T : 2.95				

கட்டிடத்தின் உயரம் : 18.29 மீ

** இத்திட்ட அனுமதியானது இ–சைன் செய்யப்பட்ட நாளிலிருந்து 8 ஆண்டுகள் வரை செல்லத்தக்கதாகும்.

மேற்கண்ட திட்ட அனுமதியானது பின்வரும் சிறப்பு நிபந்தனைகள் மற்றும் பொது நிபந்தனைகளுடன் வழங்கப்படுகிறது.

(a) சிறப்பு நிபந்தனைகள்

1) இம்மனைப்பிரிவு சம்மந்தமாக திருச்சிராப்பள்ளி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு எண் O.S.No.193/2021 மற்றும் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு எண் W.P.(MD).No.4605/2023 ஆகியவை நிலுவையில் உள்ளது. மேலும் இதர வழக்குகள் ஏதேனும் நிலுவையில் இருப்பின், இத்திட்ட அனுமதி அவ்வழக்குகளின் தீர்ப்புகளுக்கு கட்டுப்பட்டதாகும்.

2) It is the responsibility of the builders to ensure safe bearing capacity of the soil and adequacy of the foundations.

3) மத்திய மாநில அரசு துறையிடமிருந்து பெறப்பட்ட தடையின்மைச் சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தும் கண்டிப்பாக நிவர்த்தி செய்யப்பட வேண்டும்.

4) Planning Permission is issued in accordance with the provisions of the Town and Country Planning Act and the rule made there under and does not cover the structural stability aspects including the safety during the construction which are covered under the Building Rules under the Local bodies Act. Planning Permission is issued subject to the condition that the applicant/developer and also the architects/Licensed Surveyors and the Structural Engineer associated with the development shall ensure that developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction.

5) ""நகர் ஊரமைப்புத் துறை சட்டபூர்வமாக தொழில் நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பெயரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரயப்பத்திரம், குத்தகைப் பத்திரம், பட்டா, தானபத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதல் கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

"சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொறுத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்பு துறை பொருத்தமான அமைப்பு அல்ல".

6) கட்டுமானங்கள் நடைபெறும் இடத்தில் பொது மக்கள் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில் வளர்ச்சிக் கட்டுப்பாட்டு விதிகளின்படி தளப்பரப்பு விகிதம் (FSI), திறவிடங்கள் (setback), வாகன நிறுத்தம் மற்றும் பல நிறுவப்பட்டிருக்க வேண்டும்.

7) The provisions in the G.O (Ms) No.17 Housing and Urban Development (UD 43) Department dated 5.2.2016 relating to installation and use of solar energy system should be followed.

7) The Tamil Nadu Government in G.O.Ms.No.112, Housing and Urban Development Department dated 22.6.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation and Development) Act 2016. The promoter has to advertise, market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building as the case may be, in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority"

(b) பொது நிபந்தனைகள்

1) உத்தேச Affordable Residential Apartment கட்டுமானத்திற்கு Solar Water heating system அமைக்கப்பட வேண்டும்.

2) வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டவாறு வாகனம் நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும்.

3) மனையில் காட்டப்பட்டுள்ள திறவிடங்கள் அதன்படியே நிலைநிறுத்தப்பட வேண்டும்.

4) தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எவ்வித மாற்றமும் செய்தல் கூடாது. மாற்றங்கள் செய்வதாக இருந்தால் இவ்வலுவலகத்தின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.

5) மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும், அரசாணை எண்.18, மற்றும் 16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 04.02.2019 மற்றும் 31.01.2020–ன்படி கட்டிடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்.

6) உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவு நீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும், பயனாளிகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி மற்றும் இதர தேவைக்கான தண்ணீர் வசதி ஆகியவற்றை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து தர வேண்டும்.

7) மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத் தொட்டி மற்றும் கிணறு ஆகியவற்றுக்கு கொசு தடுப்பு சாதனம் பொருத்தப்பட வேண்டும்.

8) உத்தேச கட்டுமானத்தில் விதிப்படி தேவையான அளவுக்கு தீ தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்பட வேண்டும்.

9) அரசாணை எண்.341, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.1) துறை நாள் 3.11.04ன்படி செப்டிக் டேங்கில் U trap அமைத்தல் வேண்டும்.

10) சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின்படி உத்தேச கட்டிடத்திற்கு Fly ash bricks மற்றும் materials பயன்படுத்தப்பட வேண்டும்.

11) தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் சட்டம் 1974 பிரிவு 25ன்கீழ் கழிவு நீர் வெளியேற்றுவது தொடர்பாக உரிய அனுமதி பெறப்' ட வேண்டும்.

12) அரசாணை எண்.18, மற்றும் 16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 4.2.2019 மற்றும் 31.01.2020 –ன் படி விதி எண்.44(2)–ன்படி ஒரு கிலோ வாட் மின்சாரத்திற்கு குறைந்தபட்சம் 10 சமீ என்ற அளவில் மேல் தளப் பரப்பில் 1/3 பாகம் Solar Photo Voltaic Panels அமைக்கப்பட வேண்டும்.

13) அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் (உண்மை நகல்) கட்டுமானங்கள் நடைபெறும்போது அவ்விடத்தில் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில் நிறுவப்பட்டிருக்க வேண்டும்.

பார்வை 3 முதல் 7 வரையிலான அரசாணையின்படி கட்டணங்கள் பின்வருமாறு மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது.

Sl.No.	Charges	Amount in Rs	Date of remittance
1)	Scrutiny fee	9,093	10.02.2023
2)	Centage Charges for Building	20,000	17.05.2023
3)	Centage Charges for Land	600	17.05.2023
4)	I & A Charges	6,97,480	17.05.2023
5)	CC charges	49,080	17.05.2023
6)	Security Deposit	3,48,740	17.05.2023
7)	Development charges Building	22,800	17.05.2023
8)	Development charges Land	2,460	17.05.2023
9)	Display board Charges	1,500	17.05.2023
	Total	**11,51,753**	

மனுதாரர் மேற்கொண்டு உத்தரவிற்காக தலைவர் கீழக்குறிச்சி ஊராட்சி அவர்களை அணுகிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(இ.சைன் செய்யப்பட்டது)
இணை இயக்குநர்/உறுப்பினர் செயலர் (மு.கூ.பொ)
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
திருச்சிராப்பள்ளி

இணைப்பு
இ.சைன் செய்யப்பட்ட_ வரைபடங்கள்

பெறுநர்
தலைவர்,
கீழக்குறிச்சி ஊராட்சி, திருவெறும்பூர் வட்டம்

நகல்
Cecilia Edel
24D, Mahalakshmi Nagar, K.K.Nagar ,
Tiruchirappalli – 620 021

Document certified by Barath S S.
Signed by: Joint Director
Location: Tiruchirappalli
Date: 2023.05.25 16:27:12

திருவெறும்பூர் ஊராட்சி ஒன்றியம் கீழக்குறிச்சி ஊராட்சி மன்ற தலைவர்
அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை : கு.ஜோஸ்பின்மேரி

கட்டிட அனுமதி எண் 30/ /2022-2023 நாள் :26/06/2023

பொருள்:- கட்டிட அனுமதி மற்றும் மனையிட அனுமதி - அடுக்குமாடி RESIDENTIAL APARTMENT BUILDING கட்டிடம் - திருச்சிராப்பள்ளி மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் - திருச்சிராப்பள்ளி மாவட்டம் - திருவெறும்பூர் தாலுக்கா – திருவெறும்பூர் ஊராட்சி ஒன்றியம் - கீழக்குறிச்சி ஊராட்சி மற்றும் கிராமம் - சர்வே எண்கள் - 208/1B3, 208/1C2-ல் 1254.2 ச.மீ பரப்பளவு கொண்ட மனையிடத்திற்கு மனை ஒப்புதலும், மனையில் அமையும் 4546.82 ச.மீ கட்டுமானத்திற்கு திட்ட அனுமதி பெறப்பட்டு கட்டிட வரைபட அனுமதிக்கு சமர்ப்பிக்கப்பட்டது – கட்டிட அனுமதி மற்றும் மனையிட அனுமதி வழங்குதல் - தொடர்பாக.

பார்வை:- 1. அரசாணை நிலை எண் - 255 ஊரக வளர்ச்சி (சி2) துறை நாள் - 18.08.1997
2. திருச்சிராப்பள்ளி மாவட்ட நகர் ஊரமைப்புதுறை இணை இயக்குநர் அவர்களின் திட்ட அனுமதி எண்: PP – DTCP (TD). NO: 77/2023/25.05.2023
3. நகர் ஊரமைப்புத்துறை இணையதள கோப்பு எண்: SWP/BPA/007233/2023
4. கீழக்குறிச்சி ஊராட்சி பல்வகை ரசிது எண்- 0794.14. நாள் -26/06/2023

உத்திரவு:-

திருவெறும்பூர் ஊராட்சி ஒன்றியம் கீழக்குறிச்சி ஊராட்சிக்குட்பட்ட சர்வே எண்கள் - 208/1B3, 208/1C2-ல் 1254.2 ச.மீ மனைப்பரப்பில் STILT FLOOR + 5 FLOORS – RESIDENTIAL APARTMENT BUILDING கட்டுமான வரைபடத்திற்கு பார்வையில் காணும் இணை இயக்குநர் அலுவலர், திருச்சிராப்பள்ளி மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் அவர்களிடமிருந்து திட்ட அனுமதி உத்திரவு பெறப்பட்டுள்ளது. இதனையடுத்து இத்துடன் இணைக்கப்பட்ட வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளபடி 4546.82 சதுர மீட்டர் பரப்பளவுள்ள குடியிருப்பு பயன்பாட்டிற்க்கான கடடிடத்திற்கு திருமதி.சிஸிலியா ஈடில் பிரியா ஏன்பவருக்கு கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு கட்டிட அனுமதி 26/06/..2023 முதல் 25/06/..2028 வரை (ஐந்து ஆண்டுகளுக்கு) வழங்கி இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

நிபந்தனைகள்:-

1. கட்டிடம் கட்டுவது வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள அளவுக்கு அதிகமாகவோ அல்லது மாறுபட்டோ இருக்கக்கூடாது.
2. கட்டிடம் கட்டுமானத்திற்கு உபயோகிக்கும் நீர் எவ்விதத்திலும் தேங்காதவாறு வசதிகள் செய்யப்பட்டவேண்டும்.
3. கட்டிடம் வரைப்படம் அங்கீகரிக்கப்பட்ட பயன்பாட்டினை தவிர வேறு காரணத்திற்காக உபயோகப்படுத்தக்கூடாது.

4. மனையின் எல்லைப்பகுதி கட்டிட பரப்பிற்கும் உட்பட்ட நிலப்பகுதியில் உயர்மட்டத்தில் இருந்து 5 அடி அல்லது 1.52 மீட்டர் உயரத்திற்குட்படாத கற்சுவர் அல்லது வேலி தவிர எவ்வித கட்டிட சுவரோ கட்டக்கூடாது.
5. மனையின் திறந்தவெளி இருக்கும் பகுதியில் சுகாதாரத்துடன் திறந்தவெளியை பேணப்படவேண்டும்.
6. கடைக்கால் தோண்டவும், நிலத்தை சமன்படுத்தவும் தவிர வேறு காரணங்களுக்காகவோ மனையில் திறந்தவெளியில் குழிகள் தோண்டவோ, பள்ளங்கள் ஏற்படுத்தவோ கூடாது.
7. மனையின் முன்புறத்தில் அல்லது பின்புறத்தில் ஏதாவது மரம் நட்டு பேணி காக்க வேண்டும்.
8. அனுமதிக்கப்பட்ட கால வரையானது இவ்வுத்திரவு இடப்படும் தேதியில் இருந்து 60 மாதங்கள் ஆகும். அதற்குள் கட்டி முடிக்காவிட்டால் உரிய கட்டணத்தில் ஐந்தில் ஒரு பாகம் அல்லது ஊராட்சியில் விதிக்கும் தொகையினை செலுத்தி புதிதாக மனு செய்து காலத்தில் நடத்த அனுமதி பெற வேண்டும்.
9. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் மாறுதல் தேவைப்படின் உரிமை அமலில் இருக்கும் காலத்திற்குள் புதிய வரைபடம் தயாரித்து ஒப்படைத்து புதிய அனுமதி பெற வேண்டும்.
10. கட்டிடம் கட்டப்பட்டவுடன் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்ட தேதி கட்டிட உபயோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட கட்டிடம் அதன் தேதி, முதலியவற்றை உடன் ஊராட்சி நிர்வாகத்திற்கு தெரிவித்து கட்டிட வரி விதிப்பதற்கு உட்படுத்த செய்ய வேண்டும்.
11. கட்டிடத்தில் தீ விபத்து ஏற்படாதவாறு பாதுகாப்பு செய்வதிலும் சுற்றுப்புறசூழ்நிலை சுகாதாரத்தில் பேணி காப்பது உரிமையாளர்களின் கடமையாகும்.
12. மழைநீர் சேகரிப்பு வடிகால் அமைத்தல் வேண்டும்.
13. அரசினால் அவ்வப்பொழுது உத்தரவிடப்படும் சகலவிதமான உத்திரவுகளுக்கும் மனுதாரர் கட்டுப்பட்டு நடக்க வேண்டும்.
14. இந்த அங்கீகாரம் தவறான முறையில் பெறப்படதாகவோ அல்லது தவறுதலுக்கும் இடம் கொடுக்கக்கூடியதாக இருக்குமானால் கீழ்க்குறிச்சி ஊராட்சி நிர்வாகத்திற்கு தோன்றும் உசிதமாக காரணத்தை கொண்டு இந்த கட்டிட அனுமதியை ரத்து செய்வதற்கோ அல்லது மாற்றம் செய்வதற்கோ உடப்பட்டதாகும்.
15. திருச்சிராப்பள்ளி மாவட்ட நகர் ஊரமைப்புதுறை இணை இயக்குநர் அவர்களின் திட்ட அனுமதி எண் : PP – DTCP (TD). NO: 77/2023/25.05.2023-ன்படி கூறப்பட்ட அனைத்து பொது நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகள் என அனைத்தையும் கண்டிப்பாக பின்பற்றப்பட்ட வேண்டும்.
16. அங்கீகரிக்கப்பட்ட வரைபடம் கட்டிடம் கட்டும் பகுதியில் பார்வைக்கு கட்டிடம் கட்டப்படும் வரை வைத்திருத்தல் வேண்டும்.
17. மேற்கூறிய நிபந்தனைகள் மீறினால் அதனால் ஏற்படும் சகலவிதமான நடவடிக்கைகளும் விண்ணப்பத்தாரரே முழு பொறுப்பினை ஏற்றுக்கொள்ள வேண்டும். இதற்கு ஊராட்சி நிர்வாகம் எவ்விதத்திலும் பொறுப்பேற்காது.
18. மண்ஆய்வறிக்கை (SOIL TEST) மத்திய மற்றும் மாநில அரசுகளிடமிருந்து பெறப்பட்ட சான்றுகள், இதர அரசுத்துறைகளிடமிருந்து பெறப்பட்ட உரிமங்கள்

உரிய தேதியில் புதுப்பிக்கப்பட்டு நடைமுறையில் இருக்க வேண்டும். மேற்படி நடைமுறை தவறும் பட்சத்தில் மேற்காண் கட்டிட உரிமம் கீழக்குறிச்சி ஊராட்சி மூலம் உத்தரவு ஏதும் பிறப்பிக்கப்படமலேயே கட்டிட அனுமதி ரத்து செய்ததாக கருதப்படும்.

24/08/2023

தலைவர்
கீழக்குறிச்சி ஊரா. சி
ஊராட்சி ஒன்றியம் திருவெறும்பூர்

இணைப்பு:-

1. அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்கள்-5

பெறுநர்:-


திருமதி.சிஸிலியா ஈடில் பிரியா,
மேலாண்மை இயக்குநர்,
M/S. Luxica Properties Private Limited,
எண். 24D, மகாலெட்சுமி நகர்,
கே.கே.நகர் அஞ்சல்,
திருச்சிராப்பள்ளி - 620 021.

அ.கு. தொடர்ச்சி

மனுதாரர் ஊராட்சிக்கு செலுத்த வேண்டிய கட்டணம் ரூ 5,07,636 /Bank Name வங்கி வரைவு எண் 117805 / நாள் 26.06.2023 மற்றும் தொழிலாளர் நல நிதி கட்டணம் ரூ 4,80,000 / Bank Name வங்கி வரைவு எண் 117806 / நாள் 26.06.2023 ஆகியவை செலுத்தப்பட்டு ரசீது சமர்ப்பித்துள்ளார்

அ. அனுமதிக்குட்பட்டு வரைவு செயல்முறைகள் ஏற்புக்கு

ஆ. வரைபட அனுமதி ஒப்புதலுக்கு



our services doesn't just end there

Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

Property Development & Approvals


Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



empowering your real estate decisions with smart tools

Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate